**Registered & Corporate Office :** Yes Bank House, Off Western Express Highway, Santacruz East, Mumbai-400055.
**CIN:** L65190MH2003PLC143249
**Branch :** Kosmo One, Tower C, 2nd Floor, Plot No. 14, 3rd Main Road, Ambattur, Chennai – 600058

### PUBLICATION OF NOTICE U/S 13 (2) OF THE SARFAESI ACT

Notice is hereby given that the under mentioned borrower(s)/ guarantor(s)/mortgagor(s) who have defaulted in the repayment of principal and interest of the Credit Facilities obtained by them from the Bank and whose facility account has been classified as Non-Performing Assets (NPA). The notices were issued to them under Section 13(2) of the Securitization and Re-construction of Financial Assets and Enforcement of Security Interest Act 2002 (SARFAESI Act) on their last known addresses but such communications got returned/un-served and as such they are hereby informed by way of this public notice.

**S.No.1. Loan No, MIC000501749921 , Borrower Name- Mrs. Rinosha & Mr. Jaleel Address -** New No. 2, Old No.8, Jani john khan 4th Lane, Royapettah, Near Nakkiran Office,Chennai-600014, **Also At** No.104/108, Ground Floor, J J khan Road, Royapettah, Chennai-600014. Near Madha Chruch No.3/2 Thulasingam Street, Pudupet, Anna Road, Chennai - 600002 **NPA Date -13-Jan-25, Demand Notice Date - 12-Feb-2025, Amount outstanding Rs.15,50,766/-, Description of property -** All that piece and parcel vacant site bearing Plot No. 248 measuring an extent of 1980 Sq ft in Samten-B Approved by (LP/D.T.C.P- approved layout MA.VA/NA.VU.ENO.68/2010 vide latter no. NA.KA.No.12502/2010 AL2 Dated 12/08/2010) comprise in old Survey No.425/1C, as per patta (Patta No.1240) New Survey No.425/1A1A1A1, situated in No.34, Santhavellur -C Village, Sriperumbudur Taluk, Kanchipuram District and within the registration district of Chengalpattu and registration sub district of Sunguvarchatram and bounded on the North by : Survey No. 425/1C (part) Converted As Green. South by : Plot No.247,East by: 40 Feet Road, West by: Plot No.22. Measuring East to West on the Northern Side - 66 Feet, East to West on the Southern Side - 66 Feet, North to South on the Eastern Side - 30 Feet, North to South on the Western Side: 30 Feet. In all totally measuring 1980 sq.ft. This property lies within the limits if Santhavellur village panchayat and Sriperumbudur panchayat union.

**S.No.2. Loan No, HLN000500915943 & 106763300000372, Borrower Name- E Babu & Office at Proprietor of ML Windows and Galzings and M Ramya, Address -** No.33/13, Annamalai Nagar 1st Street, Mettu Palayam West, Mambalam Chennai 600033 **Also At** No.6A, Munusamy Street, Jabarkhanpet Ashok Nagar, Chennai 600083 office at No.10/91, Pillaiyar Koil Street, Maduvangarai, Guindy Chennai - 600032 **NPA Date - 17.08.2024, Demand Notice Date - 13-Mar-2025, Amount outstanding Rs.21,34,863/- Description of property - Schedule "B" -** All the piece and parcel of Residential apartment situated at Karanaithangal Village, Sriperumbudur Taluk, Kancheepuram District, comprised in Survey numbers, extents as detailed belowNorth by - remaining extent in S.No.27/5B & remaining extent in S.No.27/5C, South by- OSR & RoadEast by S.Nos. 27/5D part, 27/5E & 50/1, West by S.No.27/5A part & OSR and situated within the Registration District of Chengalpattu and Sub registration District of Sunguvarchathiram. **Schedule "C"** 350 sq.ft UDS of land and Apartment No.106 with super built up area of 7655 sq.ft (plinth area plus a proportionate common area) having carpet area of 469 sq.ft., in the first floor in the residential apartment complex known as "RESIDENTIAL PROJECT SARANGA" to be constructed in the above schedule property.

**S.No.3. Loan No- HLN000501137456, Borrower Name- Mr. K Manikandan & Mr. K Manikandan office at Sowmiya PVC Doors & E Kittu, Address-** No.3/617, Kanni Koil Street Sittalapakkam, Chennai - 600126 Near Oil Company office at No.2/456, Priyadharsini Nagar, Sittalapakkam, Chennai 600126 Near Oil Company **NPA Date - 10-Mar-2025 ,Demand Notice Date- 18-Mar-2025, Amount outstanding Rs. 48,42,668/-, Description of property-** All that piece and parcel of House Site bearing Plot No.4, measuring an extent of 953 Sq.ft., Comprised in Survey No.68/7A, Old Patta No.5314, as per patta Survey No.68/7A2, New Patta No.6212 & 9218, as per Patta New Survey No.68/7A2C, in the Layout Named "SRI KUBERAN NAGAR PHASE-I", (Vide Layout Approval No.6/2014-2015, Dated 14.11.2014, issued by Vengadamangalam Panchayat & Vide Plot Regularization (DTCP) Plan Approval vide Planning Permit Approval No.62, dated: 03.10.2019, issued by the special officer, Vengadamangalam Panchayat Union & Block Development Officer, Kattankolathur) Situated at VENGADAMANGALAM VILLAGE, Vandalur Taluk, Chengalpattu District, within the Registration District of South Chennai and Sub-Registration District of Guduvanchery.Bounded on the :- North by Plot No.5, South by Plot No.3, East by 24 feet Road, West by Vacant Land, Measuring: East to West on the Northern Side - 31 feet 9 inches, East to West on the Southern Side - 31 feet 9 inches, North to South on the Eastern Side - 30 feet, North to South on the Western Side - 30 feet,Total extent of 953 Sq.ft.,

**S.No.4. Loan No AFH000501837971 , Borrower Name- M Vijayakumar & M Vijayakumar Prop. of V M Silver Works , Malathi V Address-** No.22/78, V V Koil Street, Kosapet Market, Chennai 600012. Also at No.5/11, Nelvai Santhv Street Kosapet Market, Chennai 600012. Office at No.22/9, 2nd Floor, Muthu Naicken Street Perambur Barracks, Perambur Chennai 600012, Near Temple **NPA Date - 15-Mar-2025, Demand Notice Date- 25-Mar-2025, Amount outstanding Rs. 29,00,494/-, Description of property -** All the piece and parcel of land with building in Plot No.73 East part, measuring 850 sq.ft., out of 1700 sq.ft., building measuring 800 sq.ft., comprised survey No.339/2 as per patta No.251 new Survey No.339/2A1A1, formed layour named it as "KGR New Town Phase I" vide approval in DTP No.369/1999, situated at No.89, Perumalpattu Village, Tiruvallur Taluk & District, within the Registration District of Tiruvallur and Sub Registration District of Joint 1 Tiruvallur. Bounded on the North by- Plot No.62, South by- 23 Feet Road, East by- Plot No.72,West by- Plot No.73 West Part belongs to Mr. Jaiganesh Measuring on the Northern side 17 feet, Southern side 17 feet, Eastern side 50 feet, Western side 50 feet. In all measuring 850 sq.ft with building.

**S.No.5. Loan No- MOR003601800708 & MOR003601831937 , Borrower Name- Mr. Rajkumar & Mrs. Rajkumari, Address -** No.42, Sri Ganapathy Illam, Sarojini Nagar, 1st Street, Selvapuram, Coimbatore 641026 **NPA Date -13-Nov-24, Demand Notice Date- 12-Feb-2025, Amount outstanding Rs.55,20,787.00/-, Description of property -** All the piece and parcel of land and building in Coimbatore North Registration District, Coimbatore North Joint 1 Registration District, Coimbatore Taluk, Coimbatore Village, S.F. No.340/2, Wet Ac.1.71 Cess Rs.11.75, S.F.No.341 Wet Ac 1.83 Cess Rs.12.56. Total Extent of the above two survey field wet Ac 3.54 Cess Rs.24.31 These lands clubbed with other adjoining lands were carved into a layout and converted into house sites and named as "SAROJINI Nagar". In this the vendor purchased the middle portion of the site No.42 having boundaries North of : Southern Portion of Site No.42 East of: 20 feet wide North South road South of: Northern portion of the site No.42 West of: Land in S.F. No.340 part In this middle Northern side East to West 50.3, Southern side East to West 51.3, Western side North to South 17.3, Eastern side North to South 17.3. Together with 875 sq.ft., of ground floor R.C.C building, 875 sq.ft of First Floor R.C.C building constructed thereon along with all doors fittings & fixtures together with electrical service connection & water tap connection with its deposit amount and right to use the East to West and North to South roads in common and use all common rights in the survey fields in common. Assessment No. 76133541. E.B Service Connection Nos.013-002-978, 013-002-912, 013-002-1031, water tap service connection No.241727. The above property is now situated in 340/2A as per new sub division. The above property situated within the limits of Coimbatore Corporation.

**S.No. 6. Loan No, AFH061601921570 , Borrower Name - Mr. Ulagaraja & Mrs. Vidhya & Mr. Ulagaraja Tamilan Auto Dingr & Paint works, Address-** No.62, Sundarrajapuram, Pachakoppan Patti, Tirumangalam Taluk, Madurai 625706 Near to Water Tank office at Konavansali, Thathneri, Madurai 625018 Near Temple **NPA Date - 02.03.2025, Demand Notice Date - 13-Mar-2025, Amount outstanding Rs. 44,49,507/- Description of property -** All the piece and parcel of land and building situated at bearing door no.52/4, VOC 4th Street, ward no.10, having total extent of 1880 sq.ft, having assessment of No.115/106/2/19-20/0000413.Item No -1, Madurai District, Madurai North Registration District, formerly Thallakulam SRO then Chokkikulam SRO now Vilangudi SRO, Madurai North Taluk, Thathaneri village, S.No.84/6, measuring 15 cents in which Northern side measuring 2 3/8 cents land with RCC house. Admeasuring East West on North - 59 feet, South - 59 feet, North South on East 19 ¾ feet, West 15 feet and measuring 1025 sq.ft of land with all amenities and bounded on the North: Property of Subramanian in S.No.84/3B, now 10 feet wide road, East: Property of hirumaliruncholai Kallalagar now 10 feet road South: Land of Krishnammal,West: Land of Vairavan Item No -2, Madurai District, Madurai North Registration District, formerly Thallakulam SRO then Chokkikulam SRO now Vilangudi SRO, Madurai North Taluk, Thathaneri village, S.No.84/6, measuring 15 cents in which thakku No.2 Northern side measuring 2 cents land with RCC house. Admeasuring East West on North - 57 feet, South - 57 feet, North South on East 15 feet, West 15 feet and measuring 855 sq.ft of land with all amenities and bounded on the North: Land of Solaiappan, East: Property of Thirumaliruncholai Kallalagar now 10 feet road, South: Land of Govindaraj ,West: Land of Petchiammal.

**Date : 21.05.2025** **Sd/-**
**Place : Tamilnadu** **(Authorized Officer)**
**YES Bank Ltd.**



# சென்னையில் மழைநீர் வடிகால் பணிகள்: முதலமைச்சர் ஸ்டாலின் நேரில் ஆய்வு

## பணிகளை விரைந்து முடிக்க அறிவுறுத்தல்

சென்னை, மே 21–

**சென்னையில் மழைநீர் வடிகால் பணிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடிக்க அறிவுறுத்தினார்.**

நேற்று (20–ந் தேதி) முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட வால்டாக்ஸ் சாலையில் உள்ள கால்வாயில் ஆகாயத்தாமரையை அகற்றும் பணி, டெமல்லஸ் சாலையில் அமைக்கப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணி, ஓட்டேரி நல்லா கால்வாயை மேம்படுத்தும் பணி மற்றும் ஓட்டேரி மெட்ரோ ரெயில் நிலையக் கட்டுமானப் பணிகள் ஆகியவற்றை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

### ஆகாதயத்தாமரை அகற்றம்

சென்னை மாநகராட்சி வால்டாக்ஸ் சாலை, கல்யாணபுரம் பகுதியில் நீர்வளத் துறை மற்றும் சென்னை மாநகராட்சி மூலம் 17.3 கி.மீ நீளம் கொண்ட பக்கிங்காம் கால்வாயில் ரோபோட்டிக் எக்ஸ்வேட்டர் வாகனம் மூலம் ஆகாயத்தாமரை அகற்றும் பணியை முதலமைச்சர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதனைத் தொடர்ந்து, திரு. வி.க. நகர் மண்டலம், டெமல்லஸ் சாலைப் பகுதியில் 17.56 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளை முதலமைச்சர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த மழைநீர் வடிகாலானது, முனுசாமி கால்வாயில் இருந்து பக்கிங்காம் கால்வாயினை இணைக்கும் வகையில் அமைக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் வார்டு 73, 76 மற்றும் 77 க்கு உட்பட்ட அங்காளம்மன் கோவில் தெரு, ராஜா தோட்டம் பழைய ஆடு தொட்டி சாலை, கே.எம். கார்டன் உள்ளிட்ட பகுதிகளில் மழைநீர் தேங்குவது தடுக்கப்படும்.

தொடர்ந்து, திரு.வி.க. நகர் மண்டலம், ஓட்டேரியில் 10.3 கிலோ மீட்டர் நீளம் கொண்ட ஓட்டேரி நல்லா கால்வாயில் தூர்வாருதல், கரைகளை பலப்படுத்துதல், புதிய தடுப்பு சுவர் அமைத்தல், தடுப்பு சுவற்றின் மேல் வேலி அமைத்தல் உள்ளிட்ட மேம்பாட்டுப் பணிகளை முதலமைச்சர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஒவ்வொன்றும் 3.3 மீட்டர் அகலமும் 1.7 மீட்டர் உயரமும் கொண்ட இரண்டு நீர் போக்கு வழி பகுதிகள் கொண்ட ஓட்டேரி நல்லா கால்வாயில், மெட்ரோ ரெயில் பணிகளுக்காக ஒரு நீர்போக்கு வழி பகுதி தற்காலிகமாக அடைக்கப்பட்டு, மற்றொரு நீர்போக்கு வழி பகுதியில் மழைநீர் தடையில்லாமல் வெளியேற வகை செய்யப்பட்டுள்ளது. பருவமழை தொடங்கும் முன்னர் இரு நீர்போக்கு வழி பகுதியிலும் மழைநீர் வெளியேறும் வகையில் பணிகள் முடிக்கப்பட வேண்டும் என்று அலுவலர்களுக்கு முதலமைச்சர் உத்தரவிட்டார்.

பின்னர், மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஓட்டேரி மெட்ரோ ரெயில் நிலையக் கட்டுமானப் பணிகளை முதலமைச்சர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது, சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடைபெறும் அனைத்து வெள்ளத் தடுப்பு பணிகளையும் விரைந்து முடிக்க வேண்டும் என்றும், அதற்கு தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் கூடுதல் பணியாளர்கள் மற்றும் இயந்திரங்களை கொண்டு அப்பணிகள் அனைத்தையும் விரைவில் முடிக்க வேண்டுமென்று முதலமைச்சர் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந் நி க ழ் வின் போ து , அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், குடிநீர் வழங்கல் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டி.ஜி.வினய், துணை ஆணையர் (பணிகள்) வ.சிவகிருஷ்ணமூர்த்தி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# சிவகங்கை கல்குவாரி விபத்தில் உயிரிழந்த 5 பேர் குடும்பத்துக்கு தலா ரூ.4 லட்சம் நிதியுதவி: முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, மே.21–

**சிவகங்கை கல்குவாரி விபத்தில் உயிரிழந்த 5 பேர் குடும்பத்துக்கு தலா ரூ.4 லட்சம் நிதியுதவி வழங்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.**

இதுகுறித்து முதலமைச்சர் ஸ்டாலின் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:–

சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி வட்டம் மல்லாக்கோட்டை கிராமத்தில் இயங்கிவரும் தனியாருக்கு சொந்தமான கல் குவாரியில் 20ந் தேதி (நேற்று) காலை எதிர்பாராதவிதமாக பாறை மற்றும் மண் சரிந்து விழுந்தது. இந்த விபத்தில் கல் குவாரியில் பணி செய்துகொண்டிருந்த முருகானந்தம், ஆறுமுகம், கணேசன், ஆண்டிச்சாமி மற்றும் ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த ஹர்ஷித் ஆகிய 5 பேர் உயிரிழந்தனர்.

இந்ததுயரகரமானசெய்தியை கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன். விபத்து குறித்து தகவல் கிடைத்ததும் உடனடியாக மாவட்ட கலெக்டரை தொடர்புகொண்டு மீட்பு நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள அறிவுறுத்தினேன். அதோடு, கூட்டுறவுத் துறை அமைச்சரை உடனடியாக சம்பவ இடத்திற்கு அனுப்பி மீட்பு நடவடிக்கைளை மேற்கொள்ளவும் அறிவுத்தினேன். மேலும், இந்த விபத்தில் காயம் அடைந்து தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் மைக்கேலுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டு உள்ளேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்குதலாரூ.4லட்சமும், காயமடைந்து ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருபவருக்கு ஒரு லட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.


## படிவம் G

**நீர் மற்றும் கழிவுநீர் ட்ரீட்மெண்ட் செயல்படுத்தும் ஓரியன் வாட்டர் ட்ரீட்மெண்ட் பிரைவேட் லிமிடெட், சென்னை (தமிழ்நாடு)-க்கான ஒப்பந்த புள்ளிகள் வரவேற்கின்றன**

(கடன் தீர்க்க வகையற்றோர் மற்றும் நொடிப்பு நிலை குறிப்பீடுகள் ஒழுங்குமுறைகள் 36A துணை-ஒழுங்குமுறை (1)) (பெறுநிறுவன கடன்தாரரின் திவால் செயல்முறைகள்), ஒழுங்குமுறைகள் 2016)ன்கீழ்)

| வ. எண். | பொருத்தமான விவரங்கள் | |
|---|---|---|
| 1. | PAN & CIN/ LLP எண்களுடன் கூடிய பெருநிறுவன கடன்தாரரின் பெயர் | **ஓரியன் வாட்டர் ட்ரீட்மெண்ட் பிரைவேட் லிமிடெட்** CIN: U29222TN2009PTC072155 PAN:AABCO1807B |
| 2. | பதிவு அலுவலக முகவரி : | சர்வே எண்.1436, மனை-852, VGP ராமானுஜர் டவுன் பகுதி II, ஸ்ரீபெரும்புதூர் கிராமம் மற்றும் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா, 602105 |
| 3. | URL -க்கான இணையதளம் | கிடைக்கவில்லை |
| 4. | பெரும்பாலான நிலையான சொத்துக்கள் இருக்கும் இடத்தின் விவரங்கள் | சர்வே எண்.1436, மனை-852, VGP ராமானுஜர் டவுன் பகுதி II, ஸ்ரீபெரும்புதூர் கிராமம் மற்றும் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா, 602105 |
| 5. | பிரதான பொருட்களின் பொருத்தப்பட்டுள்ள திறன் / சேவைகள் | கிடைக்கவில்லை |
| 6. | கடந்த நிதியாண்டில் விற்பனை செய்யப்பட்ட பிரதான பொருட்கள் / சேவைகள்-ன் அளவு மற்றும் மதிப்பு | 31.03.2024 முடிவடைந்த நிதியாண்டில் கடைசியாக கிடைக்க பெற்ற தனிக்கை செய்யப்பட்ட நிதி அறிக்கையின்படி செயல்முறைகளிலிருந்து மொத்த வருவாய் இந்திய ரூ.2,76,33,345.75 |
| 7. | பணியாளர்கள் / தொழிலாளர்களின் எண்ணிக்கை | இடைநீக்கம் நீக்கம் செய்யப்பட்ட நிர்வாகத்தினால் கொடுக்கப்பட்டுள்ள தகவலின்படி நொடிப்புக்கான தொடங்கப்பட்ட தேதியன்றுள்ளபடி 5 பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள். |
| 8. | கடைசி இரண்டு ஆண்டிற்கான கிடைக்கப்பெற்ற பட்டியல் உட்பட மேலும் விவரங்கள் (அட்டவணைகளுடன்), கடன் கொடுத்தவர்களின் பட்டியல் அனைத்தும் கொடுக்கப்பட்டுள்ள URL இணையதளம் | முழு விவரங்களை கொண்ட பட்டியல் தீர்மான வல்லுனரின் மின்னஞ்சல் முகவரியான orionwatercirp@gmail.com-க்கு அனுப்ப வேண்டும் |
| 9. | பிரிவு 25(2) (h) -ன் கீழ் தீர்மானத்திற்கான விண்ணப்பதாரர்களின் தகுதிக்கான குறியீடு கிடைக்கும் இணையதளம் | முழு விவரங்களை கொண்ட பட்டியல் தீர்மான வல்லுனரின் மின்னஞ்சல் முகவரியான orionwatercirp@gmail.com-க்கு அனுப்ப வேண்டும் |
| 10. | ஒப்பந்த புள்ளிகளை பெறுவதற்கான கடைசி தேதி | 05.06.2025, வியாழக்கிழமை |
| 11. | தகுதியுள்ள தீர்மானத்தின் விண்ணப்பதாரர்களுடைய தற்காலிக பட்டியல் வழங்கப்படும் தேதி | 15.06.2025, ஞாயிற்றுக்கிழமை |
| 12. | தற்காலிக பட்டியல் குறித்து ஆட்சேபணைகளை சமர்பிக்க கடைசி தேதி | 20.06.2025, வெள்ளிக்கிழமை |
| 13. | விருப்பமுள்ள தீர்மான விண்ணப்பங்களின் இறுதி பட்டியல் வழங்கப்படும் தேதி | 30.06.2025, திங்கட்கிழமை |
| 14. | விருப்பமுள்ள தீர்மான விண்ணபதாரருக்கு தீர்மான திட்டங்கள் இவெல்யூவேஷன் மேட்ரிக்ஸ், மெமோரண்டம் போன்ற தகவல்கள் வழங்கப்படும் தேதி | 05.07.2025, சனிக்கிழமை |
| 15. | தீர்மான திட்டங்களை சமர்ப்பிக்கும் கடைசி தேதி | 04.08.2025, திங்கட்கிழமை |
| 16. | ஒப்பந்த புள்ளிகளை சமர்ப்பிக்கும் மின்னஞ்சல் முகவரி: | orionwatercirp@gmail.com |

ஒப்பம்/-
சன்தீப் கோத்தாரி
கலைப்பாளர் - **ஓரியன் வாட்டர் ட்ரீட்மெண்ட் பிரைவேட் லிமிடெட்**
IBBI பதிவு எண். : IBBI/IPA-001/IP-P-02301/2020-2021/13494
ஸ்பென்சர் பிளாசா, முதல் தளம், எண்.73, பான்தியன் சாலை, எழும்பூர், சென்னை, தமிழ்நாடு - 600 008

**நாள் : 21-05-2025**
**இடம் : சென்னை**


''வைஜெயந்தி ஐபிஎஸ்'' விஜயசாந்திக்குப்பின்

# 'ஆக்க்ஷன் குயீன்' சாய் தன்ஷிகா: நடிகர் விஷால் பெருமிதம்

## சிலம்பம் அத்துப்படி; தற்காப்புக் கலையில் பிளாக் பெல்ட்




சென்னை, மே 21–

**நடிகர் விஷால் – நடிகை சாய் தன்ஷிகா திருமணம் ஆகஸ்ட் மாதம் 29ந் தேதி நடைபெறுகிறது. சென்னை பிரசாத் ஸ்டுடியோவில் நடைபெற்ற “யோகிடா...” படத்தின் பாடல் வெளியீட்டு விழாவில் பங்கேற்ற இருவரும் இதைக் கூட்டாக அறிவித்தார்கள்.**

பேராண்மை, பரதேசி, கபாலி, சோலோ – படங்களில் நடித்தவர் சாய்தன்ஷிகா.

அறிமுக இயக்குனர் கௌதம் கிருஷ்ணா இயக்கத்தில் விரைவில் திரைக்குக்கு வரும் இப்படத்தில் “ஆக்க்ஷன்” நாயகியாக இவர் நடித்திருக்கிறார். 'வைஜெயந்தி ஐபிஎஸ்' படத்தில் விஜயசாந்திக்கு பிறகு போலீஸ் கெட்டப்பில் அதிரடி நாயகி உண்மை சம்பவத்தில் ஒரு திரைப்படம். தயாரிப்பு : வி.செந்தில்குமார்.

''தென்னிந்திய நடிகர் சங்க கட்டடத்தின் திறப்பு விழா ஆகஸ்ட் 15ந் தேதி (சுதந்திர தினம்) என்று தேதியை நிர்ணயித்து, அதற்கான பணிகளை முடுக்கிவிட்டு இருக்கிறேன்.

அன்று கட்டிடத் திறப்பு விழா வெற்றிகரமாக முடிந்ததும், எங்கள் திருமணம் ஆகஸ்ட் 29ஆம் தேதி நடைபெறும். பெற்றோர்கள் பரிபூரண சம்மதத்தோடு நடைபெறும் காதல் திருமணம் இது'' என்று இருவரும் மகிழ்ச்சியோடு தெரிவித்தார்கள்.

“சாய் தன்ஷிகாவை மணந்து கொண்டு மிகவும் மகிழ்ச்சியான வாழ்க்கை வாழப் போகிறேன். அவர் இப்போது ஆக்க்ஷன் கதாநாயகி ஆகி இருக்கிறார். திருமணத்திற்குப் பிறகும் அவர் தொடர்ந்து படங்களில் நடிப்பார். நடிப்புக்கும்,திறமைக்கும் நான் தடை சொல்ல மாட்டேன். ஒரே வீட்டில் ஆக்க்ஷன் ஹீரோவும் ஆக்ஷன் ஹீரோயினும் இருக்கப் போகிறார்கள். இனி எங்கள் வீட்டுக்கு பாதுகாப்பு பாதுகாவலர்களே தேவையில்லை...'' என்று நகைச்சுவையோடு குறிப்பிட்டு, திருமண அறிவிப்பை வெளியிட்டார் விஷால்.

''விஷாலின் பிறந்தநாள் ஆகஸ்ட் 29. அன்றே அவரை நான் மணம் முடிக்கிறேன்'' என்று சாய் தன்ஷிகா மகிழ்ச்சியோடு குறிப்பிட்டார்.

பாடல் வெளியீட்டு விழாவுக்கு வந்திருந்த நடிகர் ராதாரவி, இயக்குனர்கள் ஆர் வி உதயகுமார், பேரரசு, மித்ரன் ஜவகர், இசையமைப்பாளர் தீபக் தேவ், ஒளிப்பதிவாளர் பூபதி, எடிட்டிங் சசிகுமார், ஸ்டண்ட் டைரக்டர் கணேஷ்குமார் உள்ளிட்ட பலரும் விஷால் சாய்தன்ஷிகாவுக்கு மேடையில் முன்கூட்டியே வாழ்த்து கூறினார்கள்.

### கடவுள் அமைத்து வைத்த மேடை

“கடவுள் அமைத்து வைத்த மேடை. இந்த மேடையில் விஷால் சாய் தன்ஷிகா திருமண அறிவிப்பு... நிகழ்ச்சிக்கு வந்த பிறகே தான் எங்களுக்கே தெரியும். நட்சத்திர தம்பதிகளின் திருமண செய்தி கேட்டு கலை உலகம் மகிழ்ச்சி அடையும்...” மீரா கதிரவன் குறிப்பிட்டுப் பாராட்டினார்.

நிகழ்ச்சியை ஐஸ்வர்யா தொகுத்து வழங்கினார். வந்திருந்தவர்களை மக்கள் தொடர்பாளர்கள் ரியாஸ், அவரது மகள் பராஸ் வரவேற்றனர்.



**சி.பி.எஸ்.இ மேல்நிலை 2ஆம் ஆண்டு தேர்வில் (2024–25) 500க்கு 486 மதிப்பெண்கள் பெற்று (தமிழ்பாடப் பிரிவில் 100/100) மதிப்பெண் பெற்றவர் மகரிஷி வித்யா மந்திர் பள்ளியைச் சேர்ந்த பார்வை குறைபாடுடைய ஹர்சிதா விஜய். இவரை அலுவலகத்திற்கு நேரில் அழைத்து கலெக்டர் ச.அருண்ராஜ் வாழ்த்துக்களை தெரிவித்து கவுரவித்தார். இதில் கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) காஜா சாகுல் அமீது, கலெக்டரின் நேர்முக உதவியாளர் (நிலம்) நரேந்திரன், தனித்துணை ஆட்சியர் அகிலா தேவி, மாவட்ட வழங்கல் அலுவலகர் ஷாகிதா பர்வின், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் வேலாயுதம், உதவி இயக்குனர் (கலால்) ராஜன் பாபு, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் கதிர்வேல், முதன்மை கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் உதயகுமார், பள்ளியின் தாளாளர் உமா மகேஷ்வரி, பள்ளி தலைமையாசிரியர் பத்மா ரகுநாதன், மாணவி தாயார் லதா, அலுவலர்கள் உடன் இருந்தனர்.**

# பழவேற்காடு அருகே கபடி போட்டி

பொன்னேரி மே 21–

திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு அடுத்த அரங்கம்குப்பம் கிராமத்தில் 2 நாட்கள் நடைபெற்ற மாபெரும் கபடி போட்டியில் பழவேற்காடு பகுதி மற்றும் வெளியூர் பகுதிகளிலிருந்து ஏராளமான கபடி குழுவினர் கலந்து கொண்டனர். வெற்றி பெற்ற அணிக்கு அண்ணா தி.மு.க. திருவள்ளூர் வடக்கு மாவட்ட செயலாளர் பலராமன் 5 அடி உயரமுள்ள பரிசு கோப்பை மற்றும் 30 ஆயிரம் ரொக்க பணம் வழங்கினார். இதில் ஒன்றிய கழகச் செயலாளர் முத்துக்குமார், எம்ஜிஆர் இளைஞர் அணி செயலாளர் பானுபிரசாத், தமிழ்ச்செல்வன், திருமலை, செல்வகுமார், கடப்பாக்கம் ராஜா, வைரவன் குப்பம் ஞானமூர்த்தி மற்றும் அரங்கம் குப்பம் அண்ணா தி.மு.க. நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.


## பொன்னி சுகர்ஸ் (ஈரோடு) லிமிடெட்

CIN:L15422TN1996PLC037200
பதிவு அலுவலகம்: "எஸ்வின் ஹவுஸ்",
13 ராஜீவ் காந்தி சாலை (OMR) பெருங்குடி,சென்னை 600 096
தொலைபேசி: 044-24961920, 24960156
**மின்னஞ்சல்:** admin@ponnisugars.com **இணையதளம்:** www.ponnisugars.com
**முதலீட்டாளர்கள் குறை தீர்க்கும் மின்னஞ்சல்:** investor@ponnisugars.com

ISO 9001/14001 CERTIFIED

## அறிவிப்பு

**1. வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு**

கம்பெனியின் 29வது வருடாந்திர பொதுக்கூட்டமானது (AGM) காணொளி காட்சி (VC)/ பிற ஆடியோ காட்சி வழிமுறைகள் (OAVM) மூலம் MCA ஆல் முன்னர் வெளியிட்ட அறிக்கைகளின் தொடர்ச்சியாக 19.09.2024 தேதியில் வெளியிடப்பட்ட பொது சுற்றறிக்கை எண் 09/2024 மற்றும் கம்பெனிகள் சட்டம் 2013 பொருந்தக்கூடிய விதிகள் ஆகியவற்றின்படி வருடாந்திர பொதுக்கூட்டம் குறித்த அறிவிப்பில் கண்டுள்ள அலுவல் குறித்த வர்த்தகத்தை மேற்கொள்ள **11 ஜூன், 2025 புதன்கிழமை அன்று காலை 11.00 மணிக்கு** நடைபெறும் என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

**2. ஆவண சேவைகள்**

மேற்கூறிய MCA, மற்றும் SEBI சுற்றறிக்கைகளின்படி டெபாசிட்டரி பங்கேற்பாளர்கள் (DPs) / பதிவாளர் மற்றும் பங்குமாற்று முகவர் (RTA) ஆகியோரிடம் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு மேற்கண்ட 29வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் 2024-2025 நிதி ஆண்டுக்கான வருடாந்திர அறிக்கை, நிதி அறிக்கை, இயக்குனர்கள் குழு அறிக்கை, தணிக்கையாளர் அறிக்கை மற்றும் இதர தேவையான ஆவணங்கள் மின்னணு முறையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மின்னஞ்சல் முகவரிகள் எங்களிடம் பதிவு செய்யப்படாத இடங்களில், வருடாந்திர அறிக்கையின் இணைய இணைப்பு மற்றும் சரியான வலைத்தள பாதையை வழங்கும் கடிதம் அனுப்பப்படுகிறது. இந்த ஆவணங்கள் கம்பெனியின் இணையதளம் www.ponnisugars.com மற்றும் ஸ்டாக் எக்சேஞ்ச் இணையதளங்களான பிஎஸ்இ லிமிடெட்டின் www.bseindia.com மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்சேஞ்ச் ஆப் இந்தியா லிமிடெட்டின் www.nseindia.com -ல் கிடைக்கும்.

**3. பதிவு தேதி**

ஈவுத்தொகை பெற தகுதியுள்ள பங்குதாரர்களைக் கண்டறிய பதிவு தேதி **வெள்ளிக்கிழமை, மே 30, 2025** என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**4. மின்னணு வாக்குப்பதிவு**

29வது வருடாந்திர பொதுக்கூட்டத்தில் முன்மொழியப்பட்ட வணிகத்தின் அனைத்து அலுவல்கள் மீது வாக்களிக்க கம்பெனி அதன் உறுப்பினர்களுக்கு ஏதேனும் ஒரு விருப்பத்தின் கீழ் (அ) தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு (ஆ) வருடாந்திர பொதுக்கூட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு வசதியை அளிக்கிறது. உறுப்பினர்கள் வாக்களிக்கும் செயல்முறைக்கு வருடாந்திர அறிக்கையின் 13-17 பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பார்க்கலாம். உறுப்பினர்கள் பின்வருவனவற்றைக் குறிப்பில் கொள்ள வேண்டும்.

(i) வாக்களிக்கும் உரிமைகளைத் தீர்மானிக்கும் கட்ஆப் தேதி புதன்கிழமை, **04 ஜூன் 2025.**

(ii) கட்ஆப் தேதியன்று, உறுப்பினர்கள் பதிவேட்டில் அல்லது டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் பயன் பெறும் உரிமையாளர் பதிவேட்டில் பதிவாகியுள்ள பெயர்களில் உள்ள நபர்கள் மட்டுமே ஏதாவது ஒரு வாக்குப்பதிவின் மூலம் வாக்களிக்க உரிமை உண்டு.

(iii) வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு அனுப்பிய பின்னர் உறுப்பினர் ஆனவற்கு மற்றும் கட்ஆப் தேதியன்று பங்குகளை வைத்திருக்கும் பட்சத்தில் அவரின் பதிவு பெற்ற மின்னஞ்சல் முகவரிக்கு 29வது ஆண்டறிக்கை அனுப்பி வைக்கப்படும். பொதுக்கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள முறையில் பயணி முகவரி மற்றும் கடவுச்சொல் பெற்று அவர்கள் தங்கள் வாக்குகளை பதிவு செய்யலாம்.

(iv) தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு சனிக்கிழமை, **07 ஜுன் 2025 (காலை 10.30)** அன்று தொடங்கி **செவ்வாய், 10 ஜுன் 2025 (மாலை 5.00 மணி)** வரை நடைபெறும். அதன் பின்னர் வாக்களிக்க முடியாது.

(v) வருடாந்திர பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ளும் கட்ஆப் தேதியன்று உள்ள உறுப்பினர்கள், தொலைதூர மின்னணு வாக்குப்பதிவின் மூலம் ஏற்கனவே வாக்களிக்காத பட்சத்தில் கூட்டத்தில் மின்னணு முறையில் வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்த உரிமை உண்டு. வருடாந்திர பொதுக்கூட்டம் முடிந்த பிறகு எந்த வாக்களிப்பும் அனுமதிக்கப்படாது.

(vi) தொலைதூர மின்னணு வாக்குப்பதிவின் மூலம் ஏற்கனவே வாக்களித்த உறுப்பினர்கள், வருடாந்திர பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளலாம். ஆனால் பொதுக்கூட்டம் நடைபெறும் போது மீண்டும் வாக்களிக்க முடியாது.

(vii) தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மற்றும் மின்னணு வாக்குப்பதிவு சேவையை அளிக்கும் CDSLன் இணையதள முகவரி: www.cdslindia.com

(viii) தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மற்றும் மின்னணு வாக்குப்பதிவு குறித்து புகார்கள் தொடர்பாக அணுக வேண்டியவரின் முகவரி:

திரு. ராகேஷ் டால்வி, மேலாளர், சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட், ஏ விங், 25வது தளம், மாரத்தான் ஃப்யூச்சரெக்ஸ், மஃபத்லால் மில் காம்பவுண்ட், NM ஜோஷி மார்க், லோயர் பரேல், (கிழக்கு) மும்பை 400 013. மின்னஞ்சல்: helpdesk.evoting@cdslindia.com, கட்டணமில்லா தொலைபேசி: 1800 21 0911.

பொன்னி சுகர்ஸ் (ஈரோடு) லிமிடெட்டுக்காக
ர. மதுசூதன்
நிறுவன செயலாளர்

சென்னை
20.05.2025





# காஞ்சி மேவளூர்குப்பத்தில் 2,00,001வது ஏக்கர் கோயில் நில அளவீட்டு பணி: அமைச்சர்கள் அன்பரசன், பி.கே.சேகர்பாபு துவக்கி வைத்தனர்

சென்னை, மே 21–

முதலமைச்சர் வழிகாட்டுதலின்படி, தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆகியோர் இன்று காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், மேவளூர்குப்பம், வள்ளீஸ்வரர் தேவஸ்தானத்திற்கு சொந்தமான நிலங்களை அளவீடு செய்து, 2,00,001வது ஏக்கர் நில அளவீடு செய்யும் பணியினை தொடங்கி வைத்து, எல்லை கற்களை நட்டு வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் கலெக்டர் கலைச்செல்வி மோகன், அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் சி.பழனி, சார் ஆட்சியர் மிருணாளினி, தனி அலுவலர்கள் தி.சுப்பையா, பி.பூங்கொடி, காஞ்சிபுரம் மண்டல இணை ஆணையர் சி.குமாரதுரை, துணை ஆணையர்கள் எம்.ஜெயா, கே.சித்ராதேவி, உதவி ஆணையர் ஆர்.கார்த்திகேயன், ஒன்றிய குழுத் தலைவர் எஸ்.டி.கருணாநிதி, ஆதிகேசவ பெருமாள் கோயில் அறங்காவலர் ந.கோபால், வள்ளீஸ்வரர் கோயில் அறங்காவலர் மு.பாலாஜி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஒட்டு மொத்தமாக கடந்த 7.5.2021 முதல் இதுவரை 971 கோயில்களுக்கு சொந்தமான ரூ.7671.23 கோடி மதிப்பீட்டிலான 7560.05 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. இதுவரை 2 லட்சம் ஏக்கர் நிலங்கள் அளவீடு செய்யப்பட்டு, 1,22,291 எல்லை கற்கள் நட்டு பாதுகாக்கப்பட்டுள்ளன. மேலும், UDR தவறுகள் குறித்து மேல்முறையீடு செய்து 5,409.87 ஏக்கர் நிலங்களும், கணினி சிட்டாவில் தவறுகள் சரிசெய்யப்பட்டு 4,491,47 ஏக்கர் நிலங்களும் கோயில்கள் பெயரில் பட்டா பெறப்பட்டுள்ளன.